# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

M.VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

பாடம் - 1

1. புவியியல் வரையறு?
   - புவியியலானது புவியை பற்றி படிக்கும் ஒரு பாடம் ஆகும்.
   - கிரேக்க மொழியில் புவி என்ற பொருள்படும் ஜியோ என்ற சொல்லையும் விவரித்தல் எனப் பொருள்படும் கிராபின் என்ற சொல்லையும் இணைத்து புவியியல் என்ற சொல் உருவாக்கப்பட்டது.

2. புவியியலின் ஐந்து கருப்பொருட்களை பட்டியலிடுக?
   - இடம், அமைவிடம், வட்டாரம், நகர்வு, மனித சுற்றுச்சூழல் தொடர்பு.

3. புவியியலின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?
   - இயற் புவியியல்.
   - மானிடப் புவியியல்.
   - புவியியல் நுணுக்கங்கள்

4. நில வரைபடவியல் வரையறு?
   - நில வரைபடவியல் என்பது அதிகாரப்பூர்வ தகவல்களின் அடிப்படையில் வெவ்வேறு அளவைகளில் நிலவரைபடங்களை உருவாக்கும் கலையாகும்.
   - உதாரணம் : மாவட்ட நிலவரைபடம் மாநில நிலவரைபடம் தேச நிலவரைபடம்.

5. கணிதப் புவியியல் என்றால் என்ன?
   - கணிதப் புவியியல், புவியியல் நுணுக்கங்களின் ஒரு உட்பிரிவாகும்
   - இது புவியின் அளவு, உருவம், இயக்கங்கள், நேரம் மற்றும் நேர மண்டலங்களை அறிந்து கொள்ள உதவுகிறது.

பாடம் - 2

1. நட்சத்திரம் வரையறு?
   - பேரண்டத்தின் ஒரு பகுதியான இவை சுய வெளிச்சம் மற்றும் வெப்பத்தை கொண்டவையாகும்.
   - தூசுக்களும் வாயுக்களும் ஈர்ப்பு சக்தியினால் ஒன்றாக பிணைந்து நட்சத்திரங்கள் உருவாகின்றன.

2. வெள்ளி கோள் அதிக வெப்பமாக இருப்பது ஏன்?
   - வெள்ளி சூரியனுக்கு மிக அருகில் உள்ள இரண்டாவது கோள் எனவே அதிக வெப்பமாக உள்ளது .
   - மிகவும் அடர்த்தியான வளிமண்டலத்தை கொண்டுள்ள இது முழுவதும் கார்பன் டை ஆக்ஸைடால் ஆனது.

3. புதனுக்கும் நெப்டியூனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

| புதன் | நெப்டியூன் |
|---|---|
| சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் | சூரியனுக்கு மிக தொலைவில் உள்ள கோள் |
| துணைக்கோள்கள் எதுவும் கிடையாது | 13 துணைக்கோள்கள் உண்டு |
| இரண்டாவது வெப்பமான கோளாகும் | மிக குளிரான கோளாகும் |



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

M.VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

4. உள் கோள்கள் என்றால் என்ன?
 - சூரியனுக்கு அருகில் உள்ள இவை நிலம் சார் அல்லது பாறைக்கோள்கள் என்றழைக்கப்படுகின்றன.
 - செவ்வாய், புதன், வெள்ளி, புவி ஆகியன உட்கோள்கள் ஆகும்.

5. ஒளியூட்டும் வட்டம் வரையறு?
 - ஒளியையும் இருளையும் பிரிக்கும் புவியை சுற்றியுள்ள கோட்டை ஒளியூட்டும் வட்டம் என்கிறோம்.
 - இது துருவங்களை கடந்து செல்லும் போது சமமான இரவும் பகலும் ஏற்படுகின்றது.

பாடம் - 3

1. டயஸ்ட்ரோபிஸம் வரையறு?
 - பாறைகளின் நகர்வு மற்றும் இடப்பெயர்வு மூலமாக புவியின் மேற்பரப்பை மாற்றி அமைக்கும் செயல்முறையை ஓட்டுரு அழிதல் (டயஸ்ட்ரோபிஸம் ) என்கிறோம்.
 - இது கண்ட ஆக்க நகர்வு மற்றும் மலையாக்க நகர்வு ஆகிய செயல்முறைகளை கொண்டுள்ளது.

2. புவியின் உட்கரு ஏன் திட நிலையில் உள்ளது?
 - புவியின் உட்கரு இரும்பு மற்றும் நிக்கல் போன்ற தனிமங்களால் புவியின் மேற்பரப்பிலிருந்து மிக ஆழத்தில் பரவியுள்ளது.
 - மேலும் இப்பகுதியில் அழுத்தம் அதிகமாக உள்ள காரணத்தால் இது திட நிலையிலேயே காணப்படுகிறது.

3. மோஹாரோவிஸிக் மற்றும் லெஹ்மேன் எல்லைகளை வேறுபடுத்துக?

<u>மோஹாரோவிஸிக் எல்லை :</u>

கவச அடுக்கின் கீழ் மேலோட்டையும் மேல் கவசத்தையும் பிரிக்கிறது.

<u>லெஹ்மேன் எல்லை :</u>

புவிக்கருவின் உட்கரு மற்றும் வெளிக்கரு இரண்டையும் பிரிக்கிறது.

4. பசுபிக் தீ வளையத்தின் முக்கியத்துவத்தை எழுதுக?
 - இங்கு எரிமலைப் பகுதியும் நில நடுக்கப் பகுதியும் ஒருங்கிணைந்து காணப்படுகிறது.
 - உலகின் எரிமலைகளில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு இப்பகுதியில் காணப்படுகிறது.

5. எரிமலைகளை அவற்றின் நிகழ்வு எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டியலிடுக?
 - செயல்படும் எரிமலைகள்.
 - உறங்கும் எரிமலைகள்.
 - செயலிழந்த எரிமலைகள்.

பாடம் - 4

1. புவிவெளி இயக்கச் சக்தி செயல்முறைகளை வரையறு?
 - வெளிப்புற சக்திகளின் தாக்கத்தினால் புவிமேற்பரப்பில் நிகழும் செயல்முறையே புவி வெளியியக்க செயல்முறை ஆகும்.
 - பாறைச்சிதைவு, பருப்பொருள் சிதைவு, நிலத்தேய்வு ஆகியவை முக்கியமான வெளி இயக்க செயல்முறைகள் ஆகும்



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

M.VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

2. பரப்பு விரிசல் என்றால் என்ன?
- ❖ பாறைகளிலிருந்து வளைந்த பாறைத்த தகடுகள் உடைந்து அரைக்கோள வடிவ ஒற்றைக்கல் தோற்றத்தை ஏற்படுத்தும் செயல்முறை பரப்பு விரிசல் ஆகும்.
- ❖ இது பொதுவாக வறண்ட பகுதிகளில் ஏற்படுகிறது.

3. பாறை வீழ்ச்சி பாறை சரிவிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
- ❖ பாறை வீழ்ச்சி : செங்குத்தானப் பாறைகளிலிருந்து பாறைத்த துண்டுகள் உடைந்து வீழ்வதை பாறை வீழ்ச்சி என்கிறோம்.
- ❖ பாறைச் சரிவு : பாறைகள் ஒன்றோடொன்று மோதி சிறிய பாறைத் துண்டுகளாக உடைவது பாறைச் சரிவு ஆகும்

4. டெல்டாவின் வகைகளை பட்டியலிடுக?
- ❖ வில்வடிவ டெல்டா, கழிமுக டெல்டா, பறவை பாத டெல்டா, ஏரி டெல்டா.
- ❖ துண்டிக்கப்பட்ட டெல்டா, விடுபட்ட டெல்டா, கூரிய வடிவ டெல்டா.

5. நீண்ட மணல் திட்டும் மற்றும் தீவு சரளை இணைப்புப் பாதையும் எவ்வாறு வேறுபடுகின்றன?
- ❖ நீண்ட மணல் திட்டு : நீளமான குறுகிய மணல் அல்லது கூழாங்கற்கள் நிறைந்த பகுதியே நீண்ட மணல் திட்டு ஆகும்.
- ❖ தீவு சரளை இணைப்புப் பாதை : தீவு சரளை இணைப்புப் பாதை என்பது தீவினை கடலோரோத்தோடு இணைக்கும் மணல் திட்டு ஆகும்.

பாடம் - 5

1. நிரந்தர பனித்தளம் வரையறு?
- ❖ தொடர்ச்சியாக இரண்டாண்டிற்கு மேலாக நிலத்திற்கு மேலும் கீழும் நீர் உறைந்து காணப்படுவதை நிரந்தர பனித்தளம் என்கிறோம்.
- ❖ இவை பெரும்பாலும் உயர் அட்ச பகுதிகளில் காணப்படுகிறது.

2. உயர் ஓதம் - தாழ் ஓதம் வேறுபடுத்து?
- ❖ உயர் ஓதம் : நிலத்தை நோக்கி மேலெழும் கடல்நீர் மட்டம் உயர் ஓதம் ஆகும்.
- ❖ தாழ் ஓதம் : கடலை நோக்கி சரியும் கடல்நீர் மட்டம் தாழ் ஓதம் ஆகும்.

3. கடலின் தொடர்ச்சி மண்டலம் வரையறு?
- ❖ அடிப்படை எல்லைக் கோட்டிலிருந்து 24 கடல் மைல் தொலைவும், பிரதேச கடல் பகுதிக்கு வெளியிலும் காணப்படும் நீர் பகுதி கடலின் தொடர்ச்சி மண்டலம் எனப்படும்.

4. சாக்கடல் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?
- ❖ அதிக உவர்ப்பியம் காரணமாக இங்கு உயிரினங்கள் வாழ முடியாத கடலாக உள்ளதால் இப்பெயர் வந்தது.
- ❖ இக்கடலின் அதிக உவர்ப்பியம் காரணமாக மனிதர்களால் இதன் மீது மிதக்க முடிகிறது.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

5. ஓதங்கள் கடல் நீரோட்டங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?
- ❖ ஓதங்கள் : சூரியன் மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசையினால் பெருங்கடலின் நீர்மட்டமானது குறிப்பிட்ட கால இடைவெளியில் உயர்ந்து தாழ்வது ஓதம் ஆகும்.
- ❖ கடல் நீரோட்டங்கள் : பெருங்கடலின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு குறிப்பிட்ட திசையில் நகரும் நீர்த்தொகுதி நீரோட்டங்கள் ஆகும்.

பாடம் - 6

1. வெப்பநிலை குறையும் விகிதத்தை வரையறு?
- ❖ வளிமண்டலத்தின் அடி அடுக்கில் வெப்ப நிலையானது அதிகரிக்கும் உயரத்திற்கு ஏற்ப குறைகிறது.
- ❖ ஒவ்வொரு 165 மீட்டருக்கு 1டிகிரி செல்சியஸ் என்ற விகித அளவில் வெப்பநிலை குறைகிறது.

2. மலைக்காற்று என்றால் என்ன?
- ❖ அதிகாலையில் மலை உச்சியிலிருந்து குளிர்ந்த காற்று கீழ் பகுதியை நோக்கி வீசுவது மலைக்காற்று ஆகும்.
- ❖ இக்காற்று பள்ளத்தாக்கிலிருந்து வெப்பக்காற்றை மேல் நோக்கி வெளியேற்றுகிறது.

3. உலகில் உள்ள அழுத்தப்பட்டைகளை படம் வரைந்து குறிக்கவும்?
- ❖ புத்தகத்தின் 167 - ஆம் பக்கத்தை பார்க்கவும்.

4. மழைப்பொழிவு மற்றும் பனி வேறுபடுத்துக?
- ❖ மழைப்பொழிவு : வளிமண்டலத்திலிருந்து விழும் நீர் துளியின் விட்டம் 0.5 மி. மீட்டருக்கு அதிகமாக இருந்தால் அது மழைப்பொழிவு ஆகும்.
- ❖ பனி : உறைபனி நிலைக்கு கீழ் மழை பெய்யும் போது பனித்துகள்களாக விழுவது பனி ஆகும்

5. மிதவெப்பமண்டல சூறாவளி உருவாகும் சூழ்நிலைகள் யாவை.?
- ❖ வளிமுகம் தோன்றல், சூறாவளி தோற்றம், முன்னேறும் நிலை.
- ❖ இடையூறு நிலை, வளிமுகம் மறையும் நிலை.

பாடம் - 7

1. உயிர்க் கோளம் என்றால் என்ன?
- ❖ உயிர் கோளம் என்பது உயிரினக் கூறுகளால் ஆனது.
- ❖ இவை உயிரினங்கள், உயிரினத்திரள், இனக்குழுமம் மற்றும் சூழ்நிலை மண்டலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

2. உயிரி புவி வேதியியல் சுழற்சி குறிப்பு வரைக?
- ❖ சத்துக்கள் சூழ்நிலை மண்டலத்தின் சுழற்சியின் வழியாக சுழல்வது உயிரி புவி வேதியியல் சுழற்சி ஆகும்.
- ❖ இதன்படி வேதியியல் பொருட்கள் சூழ்நிலை மண்டலத்தில் உள்ள உயிர் மண்டலம் மற்றும் உயிரற்ற மண்டலம் வழியாக சுழல்கிறது.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

3. உயிரினக் குழுமத்தின் வகைகள் யாவை?
- நீர்வாழ் உயிரினக் குழுமம்.
- நிலவாழ் உயிரினக் குழுமம்.

4. பவளப்பாறைகள் என்றால் என்ன? அவைகளின் வேறுபட்ட வகைகளை விவரி?
- கடற்பவளங்கள் கூட்டமைப்போடு வாழ்கின்ற முதுகெலும்பில்லாத கடல்வாழ் உயிரினங்களில் ஒன்றாகும்.
- பவளப்பாறைகளின் வகைகள் : கடலோரப் பவளத்திட்டு, அரண் பவளத்திட்டு, வட்ட வடிவப் பவளத்திட்டு.

5. எத்தனை உயிரினப் பன்மை வளமையங்கள் இந்தியாவில் காணப்படுகிறது? அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக?
- 4 பன்மை வளமையங்கள் இந்தியாவில் காணப்படுகிறது.
- மேற்கு தொடர்ச்சிமலை, ஹிமாச்சலப் பிரதேசம், இந்தோ - பர்மா பிரதேசம், சுந்தர்லேண்ட்.

பாடம் - 8

1. பேரிடர் அபாயக் குறைப்பிற்கான பொது விழிப்புணர்வு வரையறு?
- பேரழிவுகளின் காரணகாரணிகளை பகுப்பாய்வு செய்து திட்டமிட்டு பேரிடர் அழிவுகளை குறைப்பதற்கான நடைமுறையே ஆகும்.
- இது நான்கு முக்கிய அணுகு முறைகளைக் கொண்டுள்ளது.
- அவை : பிரச்சாரம், பங்கேற்று கற்றல், முறைசாரா கல்வி மற்றும் முறைசார் பள்ளி சார்ந்த பங்களிப்பு ஆகும்

2. கியூகோ செயல்திட்ட வரைவு குறிப்பு தருக?
- பேரிடர் அபாயக் குறைப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து கியூகோ செயல்திட்ட வரைவு 2005 ல் உருவாக்கப்பட்டது.
- இது பேரிடரை எதிர்கொள்ளும் சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது.

3. நிலச்சரிவிற்கான காரணங்கள் யாவை?
- புவி ஈர்ப்பு விசையின் நேரடி தாக்கம், மழைப்பொழிவு, பனி உருகுதல், ஆற்றின் அரிப்பு.
- வெள்ளப் பெருக்கு, நிலநடுக்கம், எரிமலை செயல்கள், மனித நடவடிக்கைகள்.

4. மின்னலின் 30 / 30 விதியினை கூறு?
- இடிக்கும் மின்னலுக்கும் இடையே உள்ள இடைவெளியானது 30 நொடிக்கும் குறைவாக இருந்தால் நாம் ஆபத்தில் இருக்கிறோமென்று பொருள்.
- கடைசி மின்னல் கீற்று அடித்து 30 நிமிடங்கள் வரை வீட்டை விட்டு வெளியில் வரக்கூடாது.

5. வறட்சி குறிப்பு தருக?
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிலத்தின் ஒரு பகுதிக்கு மழை பற்றாக்குறையாக இருப்பதை வறட்சி என்கிறோம்.
- வறட்சியின் போது கடுமையான வெப்பம் இருக்கும்.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

M.VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

பாடம் - 1

1. முறையான அணுகுமுறையையும் வட்டார அணுகுமுறையையும் வேறுபடுத்துக?

| முறையான அணுகுமுறை | வட்டார அணுகுமுறை |
|---|---|
| இது அலெக்சாண்டர் வான் ஹம்போல்ட் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. | கார்ல் ரைட்டர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| பரப்பு சார் மாதிரி மற்றும் கட்டமைப்பை, புவியின் மீது உருவாக்கும் இயற்கை அல்லது செயற்கை நிகழ்வுகளை இது வகைப்படுத்துகிறது | நிலத்தோற்றம், மழை, தாவரம், தனிநபர் வருமானம் போன்ற ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு காரணிகளின் அடிப்படையில் நிலப்பரப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன. |
| இயற் புவியியல், உயிர் புவியியல், மானிடப் புவியியல், புவியியல் நுணுக்கங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. | வட்டார ஆய்வுகள், வட்டார பகுப்பாய்வு, வட்டாரத் திட்டமிடல், வட்டார வளர்ச்சி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. |

2. புவியியல் தகவல் வரைச்சட்டம் என்றால் என்ன?
   - ❖ சிக்கலான பரப்பு சார் பிரச்சினைகளை சிறப்பாக புரிந்து கொள்ள புள்ளி விவரத் தகவல்களை வரிசை மற்றும் பத்தியில் அடுக்கி வைத்து காட்டும் முறைக்கு புவியியல் வரைச்சட்டம் என்று பெயர்.
   - ❖ ஜே. எல். பெர்ரி என்பவர் புவியியலை மிகத் திறம்பட படிப்பதற்கு இம்முறையை மனுடவியலிலிருந்து எடுத்துக் கொண்டார்

3. தொலை நுண்ணுணர்வு பற்றி குறிப்பு வரைக?
   - ❖ புவியின் மேற்பரப்பில் காணப்படும் தகவல்களை வானூர்தி மற்றும் செயற்கை கோள்களில் பொருத்தப்பட்ட உணர்வுகள் மூலம் திரட்டுகிறது.
   - ❖ இத்தகவல்களை பகுப்பாய்வு செய்து பரப்பு சார் தகவல்களாக நமக்கு அளிக்கிறது.
   - ❖ இது புவியியல் நுணுக்கத்தின் ஓர் அங்கமாகும்.

4. மருத்துவ புவியியல் வரையறு?
   - ❖ புவிச்சூழலில் பல்வேறு வகையான நோய்களின் தொடக்கம் மற்றும் பரவல் பற்றி ஆய்வு செய்கிறது.
   - ❖ உலக சுகாதாரம் மற்றும் உடல் நலம் பேணுதலுக்கான திட்டமிடலுக்கும் இது உதவுகிறது.
   - ❖ இது மானிடப் புவியியலின் ஓர் அங்கமாகும்.

5. பேராழியியல் வரையறு?
   - ❖ இது பேராழியை பற்றிய படிப்பாகும்.
   - ❖ போராழிகளின் வடிவம், அளவு, ஆழம், பரவல், கடலடி நிலத்தோற்றங்கள், கடல் நீரோட்டங்கள் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் குறித்து இது விவரிக்கிறது.
   - ❖ இது புவியியலின் ஒரு உட்பிரிவாகும்

பாடம் - 2

1. குறுங்கோள்கள் என்றால் என்ன?
   - ❖ சூரியனை சுற்றி வரும் பாறையால் ஆன விண்வெளிக் கற்கள் ஆகும்.
   - ❖ இவை சிறிய கோள்கள் எனவும் அழைக்கப்படுகிறன.
   - ❖ அளவில் பெரியதாக காணப்படும் குறுங்கோள்கள் வான்கோள்கள் என அழைக்கப்படுகின்றன.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

2. நம்மால் ஏன் எப்பொழுதும் நிலவின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்க முடிகிறது?
- சந்திரனானது புவியிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ளது.
- மேலும் சந்திரன் தன்னைத்தானே சுற்றுவதற்கும் புவியை சுற்றி வருவதற்கும் ஒரே நேரத்தை ( 27 நாட்கள் மற்றும் 7 மணி 43 நிமிடங்கள் ) எடுத்து கொள்கிறது.
- எனவேதான் நாம் புவியில் இருந்து பார்க்கும் போது நிலவின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்க முடிகிறது.

3. சனிக் கோளின் பண்புகளைக் குறிப்பிடுக?
- சூரியக் குடும்பத்தில் ஆறாவது கோளான இது அளவில் இரண்டாவது பெரிய கோளாகும்.
- இக்கோள் அழகான வளைய அமைப்பை கொண்டுள்ளது.
- இது பனித்துகள் மற்றும் கரியமில தூசிகளாலும் ஆனது.
- சூரிய குடும்பத்தில் நீரை விட அடர்த்தி குறைவான ஒரே கோளாகும்.

4. சந்திர கிரகணத்திற்கும் சூரிய கிரகணத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை எழுதுக?

சூரிய கிரகணம் : சூரியனுக்கும் புவிக்கும் இடையில் சந்திரன் அமைந்திருக்கும் போது சூரிய கிரகணம் நிகழ்கிறது.
சூரிய கிரகணம் சில நிமிடங்கள் மட்டுமே நிகழ்கிறது.

சந்திர கிரகணம் : சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையில் புவி வரும் போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது.
சந்திர கிரகணம் சில மணி நிமிடங்கள் வரை நீடிக்கும்.

5. ஷாங்கையில் ( 121° 47 கி ) இரவு மணியாக இருக்கும் போது சென்னையின் உள்நாட்டு நேரத்தைக் கணக்கிடுக ( 80° 27 கி )?

பாடம் - 3

1. வெப்ப உமிழ்வு சுழற்சி பற்றி குறிப்பு வரைக?
- புவிக்கருவில் உள்ள வெப்பத்தின் காரணமாக பாறை குழம்பு சுழல்வதை வெப்ப உமிழ்வு சுழற்சி என்கிறோம்.
- வெப்ப உமிழ்வு சுழற்சியின் காரணமாக புவித்தட்டுகள் நகர்கின்றன.
- இந்த நகர்வினால் மடிப்பு, பிளவு, நிலநடுக்கம், எரிமலைகள் போன்றவை உருவாகின்றன.

2. புவித்தட்டு எல்லைகளின் வகைகளை பெயரிட்டு எழுதுக?
- விலகும் எல்லைகள் : இரண்டு புவித்தட்டுகள் ஒன்றை விட்டு ஒன்று விலகி செல்லும் எல்லையை விலகும் எல்லைகள் என்கிறோம்.
- குவியும் எல்லைகள் : இரண்டு புவித்தட்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் எல்லையை குவியும் எல்லை என்கிறோம்.




Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

- பக்கவாட்டு நகர்வு எல்லை : இரண்டு புவித்தட்டுகள் பக்கவாட்டில் நகரும் எல்லையை பக்கவாட்டு நகர்வு எல்லை என்கிறோம்

3. புவித்தட்டுகள் ஏன் நகர்கின்றன?
- வெப்ப உமிழ்வு சுழற்சியின் காரணமாக புவித்தட்டுகள் நகர்கின்றன.
- இதன்படி புவித்தட்டுகள் வெவ்வேறு திசைகளில் உந்தி அல்லது இழுத்து நகர்த்தப்படுகிறது.
- இந்த நகர்வினால் மடிப்பு, பிளவு, நிலநடுக்கம், எரிமலைகள் போன்றவை உருவாகின்றன.

4. மடிப்புகள் வகைகளை எழுதுக?
- சமச்சீர் மடிப்பு, சமச்சீரற்ற மடிப்பு.
- சமச்சாய்வு மடிப்பு, தலைகீழ் மடிப்பு.
- படிந்த மடிப்பு.

5. எரிமலையின் படம் வரைந்து பாகங்களை குறிக்கவும்?




CONE : கூம்பு VENT : துளை ASH : சாம்பல் FUMARHOLE : லாவா
LAVA : லாவா SIDE VENT : பக்கத் துளை CRUST : மேல் ஓடு

பாடம் - 4

1. இயற்பாறை சிதைவை வேதியியல் பாறை சிதைவோடு ஒப்பிடுக?

வேதியியல் பாறை சிதைவு :
- வேதியியல் சிதைவு என்பது பாறைகளின் வேதிப்பிரிகை ஆகும்.
- இது கிரானைட் பாறையிலிருந்து உருவான சீனக் களிமண் போன்ற மாற்றி அமைக்கப்பட்ட பாறைப் பொருட்களை உருவாக்குகிறது.

இயற்பாறை சிதைவு :
- வானிலை கூறுகளின் தூண்டுதலால் பாறைகள் உடைதலை இயற்பாறை சிதைவு என்கிறோம்.
- இயற்சிதைவானது சிறிய கூரிய பாறைத் துண்டுகளாக இப்பாறைகளிலிருந்து உருவாகின்றது.

2. கடல்குகை எவ்வாறு கடல்த்தூணாக மாறுகிறது?
- கடல் அலைகளின் செயல்களினால் கடற்குகைகள் அரிக்கப்படும் போது கடல்வளைவுகள் ஏற்படுகின்றன.
- கடலின் அரித்தல் செயல்களால் இயற்கையாக அமைந்துள்ள கடல் வளைவுகள் உடைகிறது.
- இவ்வாறாக கடலோரத்தில் உருவாக்கப்படும் வன்சரிவைக் கொண்ட செங்குத்துத் தூண் போன்ற பாறை அமைப்பே கடல்தூண் எனப்படுகிறது.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

3. ஆற்று வளைவு எவ்வாறு குருட்டு ஆறாக மாறுகிறது?
   - ஆற்றின் அரித்தல் மற்றும் படிதல் செயல்முறைகளின் விளைவாக ஆற்று வளைவு உருவாகின்றது.
   - இவ்வாறு முதன்மை ஆற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு தனித்து காணப்படும் ஆற்று வளைவே குருட்டு ஆறு ( குதிரை குழம்பு ஏரி ) எனப்படுகிறது
   - இந்நிலத்தோற்றம் குதிரை லாட வடிவில் காணப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது

4. பிறைவடிவ மணல் குன்று மற்றும் சங்கிலித்தொடர் மணல் குன்று வேறுபடுத்துக?

| பிறைவடிவ மணல் குன்று | சங்கிலித்தொடர் மணல் குன்று |
|---|---|
| பாலைவனத்தின் மிகச்சிறந்த ஒரு நிலத்தோற்றமுடைய மணல்குன்று. | நீண்ட முகடுகளை கொண்ட மணல் குன்றுகள். |
| கற்று வீசும் திசைக்கு எதிர் திசையில் நீண்டு காணப்படுகிறது | கற்று வீசும் திசையின் அமைப்பில் காணப்படுகின்றன. |
| இவை 27 மீட்டர் வரை மட்டுமே காணப்படும். | இவை பல கிலோ மீட்டர் வரை நீண்டு காணப்படும். |

5. மொரைன்களை வகைப்படுத்தி விளக்குக?
   - <u>பக்கவாட்டு மொரைன்கள்</u> : பனி யாற்றின் இரு பக்கங்களிலும் இணையாக செல்லும் பாறைப்படிவு முகடுகளே பக்கவாட்டு மொரைன்கள் ஆகும்.
   - <u>படுகை மொரைன்கள்</u> : பனியாற்று பள்ளத்தாக்கின் படுகையில் ஏற்படும் பனியாற்று படிவுகள் படுகை மொரைன்கள் ஆகும்.
   - <u>மத்திய மொரைன்கள்</u> : இரண்டு பனியாறுகளுக்கு இடைப்பட்ட பள்ளத்தாக்கு பகுதியில் படிவிக்கப்பட்ட மொரைன்கள் மத்திய மொரைன்கள் ஆகும்.
   - <u>விளிம்பு மொரைன்கள்</u> : பனியாறுகளின் முடிவில் விட்டுவிடப்படும் பாறைத்துகள் படிவுகளே விளிம்பு மொரைன்கள் ஆகும்.

பாடம் - 5

1. தனித்த பொருளாதார மண்டலம் பற்றி சிறு குறிப்பு வரைக?
   - தனித்த பொருளாதார மண்டலம் அடிப்படை எல்லைக் கோட்டிலிருந்து 200 கடல் மைல்கள் வரை காணப்படுகிறது.
   - கடற்கரையோர நாட்டுக்கு இச்சிறப்பு பொருளாதார மண்டலத்தில் முழு அதிகாரம் உண்டு.
   - இங்கு காணப்படும் பொருளாதார வளங்களை இந்நாடுகள் பயன்படுத்தி கொள்ளலாம்.

2. கடலடி குன்றுகளும் கடலடி மட்ட குன்றுகளும் இடையே உள்ள வேறுபாட்டை கூறுக?

| கடலடி குன்று | கடலடி மட்ட குன்று |
|---|---|
| கடலுக்கு அடியில் காணப்படும் கூம்பு வடிவிலான எரிமலை | கடலுக்கு அடியில் காணப்படும் தட்டையான உச்சி பகுதியுடைய எரிமலை |
| நிலப்பரப்பிலிருந்து ஆயிரம் மீட்டருக்கும் மேல் உயர்ந்து இருக்கும் | ஆழ்கடல் மட்ட குன்றுகளாகும் |
| எரிமலை வெடிப்பினால் உண்டாகிறது | புவித்தட்டு நகர்வினால் உண்டாகிறது |



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

3. பெருங்கடலடி சமவெளி பற்றி குறிப்பு வரைக?
   - மொத்த கடலடி நிலப்பரப்பில் 50 % க்கு மேல் இச்சமவெளி காணப்படுகிறது.
   - இச்சமவெளியில் மிகவும் மென்மையான படிவுகள் காணப்படுகிறது.
   - இப்படிவுகள் களிமண் துகள்களாலும் கடல் நுண்ணுயிரிகளால் ஆன கலவையாகும்.

4. ஒரு இடத்தின் உவர்ப்பியத்தை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக?
   - கடல் நீர் ஆவியாகும் வீதம், மழைப்பொழிவுகள், கடல் நீரோட்டங்களால் கலக்கும் நீர்.
   - ஆறுகளிலிருந்து கடலில் சேரும் நன்னீரின் அளவு.
   - துருவப் பகுதியில் உள்ள பனி உருகி கடல் நீரில் கலப்பது.
   - கோள் காற்றுகளால் மேலெழும் ஆழ்கடல் நீர்

5. கடல் நீரோட்டங்களின் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக
   - உலக வெப்ப நிலையை ஒழுங்குபடுத்துகின்றன.
   - கப்பலை எளிதாக செலுத்த பெரிதும் உதவுகின்றன.
   - கடல்களில் கொட்டப்படும் இரசாயனங்கள் மற்றும் கழிவுகளை நீர்த்துப்போக செய்கின்றன.

பாடம் - 6

1. ஓசோன் அடுக்கு ஏன் சிதைவடைகிறது?
   - தெளிப்பான்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் குளோரா புளோரா கார்பன் மற்றும் ஹாலோன் வாயுக்களை வெளியிடுகின்றன.
   - இவ்வாயுக்கள் வளிமண்டலத்தில் வேதிவினை புரிந்து ஓசோன் மூலக்கூறுகளை சிதைக்கின்றன.
   - சூப்பர் சோனிக் விமானம் வெளியிடும் நைட்ரஜன் வாயுக்களாலும் ஓசோன் மூலக்கூறுகள் சிதைகின்றன.

2. வெப்பச்சமநிலை படம் வரைந்து வெளியேறும் கதிர்வீசலின் அளவை குறிக்கவும்?
   - பக்க எண் 159 ஐ பார்க்கவும்

3. நகர வெப்பத்தீவுகள் எவ்வாறு உருவாகின்றன?
   - நகர்புறப்புறப்பகுதி மற்றும் பெருநகரங்களை சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவு வெப்பநிலை காணப்படுகிறது.
   - வானுயர்ந்த கட்டிடங்கள், சாலைகள், குறைவான தாவரப்பரவல், குறைவான மண்பரப்பு ஆகியன நகர் பகுதிகளில் காணப்படுகின்றன.
   - மேற்கண்ட காரணங்களால் நகர்ப்புறப் பகுதிகள் கிராமங்களை விட அதிக வெப்பமாக காணப்படுகின்றன. இது நகர வெப்பத்தீவு எனப்படுகிறது.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

4. கடற்காற்று மற்றும் நிலக்கற்று வேறுபடுத்துக?

| | |
|---|---|
| பகல் நேரத்தில் காற்றானது உயர் அழுத்தமுடைய பெருங்கடலிலுருந்து தாழ்வழுத்தமுடைய நிலப்பகுதியை நோக்கி வீசுவது கடற்காற்று ஆகும். | இரவு நேரத்தில் இந்நிகழ்வு எதிர்மறையாக நிலத்திலிருந்துக் கடலை நோக்கி வீசுவது நிலக்கற்று ஆகும் |
| மீனவர்கள் மாலையில் கரைக்கு திரும்ப கடற்காற்று உதவுகிறது. | மீனவர்கள் அதிகாலையில் கடலுக்கு மீன்பிடிக்க நிலக்கற்று உதவுகிறது. |

5. மழைபொழிவின் வடிவங்களை பட்டியலிடுக?
- ❖ மழைப்பொழிவு, ஆலங்கட்டி மழை.
- ❖ கல் மழை, பனி.
- ❖ பனித் திவலை.

பாடம் - 7

1. நுகர்வோர் என்றால் என்ன அவற்றின் வகைகளை விவரிக்க?
- ❖ உணவையும் ஊட்டச்சத்தையும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது மற்ற உயிரினங்களிடமிருந்தோ பெற்று கொள்பவர் நுகர்வோர் ஆவார்.
- ❖ தங்கள் சொந்த உணவை இவர்களால் உற்பத்தி செய்ய முடியாது.
- ❖ நுகர்வோர்களை முதல் நிலை நுகர்வோர் இரண்டாம் நிலை என்று பிரிக்கலாம்.

2. ஆற்றல் பிரமிடுகள் குறித்து விவரிக்க?
- ❖ ஓர் ஆற்றல் பிரமிடு சூழ்நிலை மண்டலம் எவ்வாறு இயங்குகிறது என்பதையும் ஒவ்வொரு வகை உயிரினத்தின் எண்ணிக்கையை அது எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதையும் வரையறுக்கிறது.
- ❖ ஆற்றல் பிரமிடின் மேல் பகுதிக்கு செல்ல செல்ல ஒவ்வொரு உணவூட்ட நிலையிலும் ஆற்றலின் அளவு படிப்படியாக குறைகின்றது.
- ❖ ஒரு உணவூட்ட நிலையில் கிடைக்க கூடிய ஆற்றலின் 10 %மட்டுமே அடுத்த உணவூட்ட நிலைக்கு செல்கிறது.
- ❖ எஞ்சிய 90 % ஆற்றலானது சுவாசித்தல் மற்றும் வளர்சிதை மாற்ற செயல்களுக்காக பயன்படுகிறது.

3. இனங்களின் பன்மையம் என்றால் என்ன?
- ❖ இனங்களின் பன்மையம் ( பன்முக சிற்றினங்கள் ) ஒரு இடத்தில் வாழும் வேறுபட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகளை குறிக்கும்.
- ❖ அதிக அளவிலான விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்களை கொண்டிருக்கும் இடங்கள் வளமிகு பன்முக மையங்கள் எனப்படுகின்றன.
- ❖ இச்சிற்றினங்கள் மூன்று வகைப்படும் : 1. வட்டார சிற்றினங்கள் 2. அன்னிய இனங்கள் 3. உலகப் பொது இனம்



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com

M.VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

4. இந்தியாவில் ஆசிய சிறுத்தைப் புலி எவ்வாறு அழிந்தது என எழுதுக?
   - ❖ இந்தியாவில் விளையாட்டிற்காக வேட்டையாடப்பட்டு முற்றிலும் அழிக்கப்பட்டன.
   - ❖ 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டில் வேளாண் விரிவாக்கத்தினால் இவற்றின் எண்ணிக்கை பெரிதும் குறைந்தது.
   - ❖ மத்தியபிரதேச மாநிலத்தில் எஞ்சிய மூன்று ஆசிய சிறுத்தை குட்டிகளை சுட்டு கொன்றனர் இவ்வாறாக இந்தியாவில் ஆசிய சிறுத்தைப் புலி அழிந்தது.

5. தேசிய பூங்காக்களைக் குறித்து எடுத்துக்கட்டுடன் சிறு குறிப்பு வரைக?
   - ❖ தேசிய பூங்காக்கள் என்பது அதிக எண்ணிக்கையில் விலங்குகள் மற்றும் தாவரங்களை தன்னகத்தே கொண்டுள்ள உயிரின வள பகுதி ஆகும்.
   - ❖ இப்பூங்காக்களுள் மனித நடமாட்டம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.
   - ❖ எ. கா : இந்தியாவின் முதல் தேசியப் பூங்காவான ஹேய்லி தேசிய பூங்கா ( ஜிம் கார்பெட் ) 1936 ல் உத்தரகாண்டில் நிறுவப்பட்டது.
   - ❖ தற்போது இந்தியாவில் மொத்தம் 103 தேசிய பூங்காக்கள் உள்ளன.

## பாடம் - 8

1. நிலச்சரிவின் போது பின்பற்ற வேண்டிய ஏதேனும் மூன்று நடவடிக்கை விதிமுறைகளை குறிப்பிடு?
   - ❖ நிலச்சரிவின் போது அசாதாரண ஒலி கேட்டால் கவனமாக இருக்க வேண்டும். காரணம் அது இடிபாடுகளில் நகர்வை குறிக்கும்.
   - ❖ நிலச்சரிவு ஏற்படக்கூடிய இடங்களின் வழியாக வாகனங்களில் செல்லும் போது கவனமாக இருக்க வேண்டும்.
   - ❖ நிலச்சரிவு ஏற்படும் இடங்களில் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும்.

2. வறட்சிக்கு முன் பின்பற்ற வேண்டிய ஏதேனும் மூன்று நடவடிக்கை விதிமுறைகளை குறிப்பிடு?
   - ❖ மழைநீர் அறுவடை செய்யும் முறையை பின்பற்ற வேண்டும்.
   - ❖ கழிவு நீரினை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்த வேண்டும்.
   - ❖ நீரினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

3. புயலுக்கு பிறகு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை?
   - ❖ மின் சாதனங்களை மின் இணைப்பிலிருந்து துண்டிக்க வேண்டும்.
   - ❖ வெளி இடங்களை சுற்றி பார்க்க செல்ல கூடாது.
   - ❖ பாம்பு மற்றும் பிற விலங்குகளிடமிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
   - ❖ குடிப்பதற்கு கொதித்த மற்றும் வடிகட்டிய தண்ணீரை பயன்படுத்த வேண்டும்.

4. தமிழ்நாட்டில் அடிக்கடி புயல் பாதிப்புக்கு உள்ளாகும் மாவட்டங்களைக் குறிப்பிடுக?
   - ❖ தஞ்சாவூர், திருவள்ளூர், திருவாரூர், திருநெல்வேலி , தூத்துக்குடி, கடலூர், கன்னியாகுமரி, காஞ்சிபுரம், சென்னை, விழுப்புரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம்.



Kindly Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gmail.com